**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 39 of 2020

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | லட்சுமி |
| Father's Name | : | க/பெ. பழனியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of June** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி 2ம் எதிரிக்காக குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது ராயர்பாளையத்தில் வசித்து வருகிறேன்.

2. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் இரவு 7.30 லிருந்து 8.15 மணியளவில் நான் ராயர்பாளையம் பிரிவிலிருந்து என்னுடைய மகன் வீட்டிற்கு வந்துவிட்டு என்னுடைய வீட்டிற்கு திரும்பி மாரியாத்தாள் கோவில் அருகே நான் கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது மேற்கு நோக்கி வந்த இருசக்கர வாகனத்தில் வந்த இருவரில் ஒருவர் இறங்கி வந்து என்னுடைய 6 பவுன் தங்க செயினை

அறுத்துவிட்டு நிற்காமல் சென்றுவிட்டார்கள். நான் சத்தம் போட்டேன். யாரும் வரவில்லை.

3. நான் திரும்பி மகன் ரங்கசாமி வீட்டிற்கு போனேன். மகனிடம் நடந்தவற்றை கூறினேன். காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புகார் நான் அளித்தது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதில் உள்ள கையொப்பம் என்னுடையதாகும். என்னுடைய செயின் கிடைத்து விட்டதாக கூறினார்கள். நீதிமன்றத்தின் மூலம் மனு செய்து செயினை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் திருடுபோன என்னுடைய செயின் ஆகும். **(புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** செயினை பறித்தவர்கள் முகமூடி போட்டிருந்ததால் அவர்களை அடையாளம் தெரியவில்லை என்று போலீசாரிடம் கூறிவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். புகார் அளிக்க என்னுடன் என்னுடைய மகன் ரங்கசாமி வந்தார். என் மகன் தான் புகார் எழுதினார். என் மகன் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். சம்பவ தினத்தன்று இரவு மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் விளக்கு வெளிச்சம் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தின் அருகே யாரும் இல்லை என்றால் சரிதான்.

2. நகைக்குரிய ரசீது போலீசார் வசம் கொடுத்தேனா என்றால் தெரியவில்லை. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2024.06.19 19:09:27 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | |
|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC 39 of 2020 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court }

Name : ரங்கசாமி

Father's Name : த/பெ. பழனியப்பன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of June** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி 2ம் எதிரிக்காக குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

முதல்விசாரணை

1. நான் தற்போது ராயர்பாளையத்தில் வசித்து வருகிறேன்.

2. தேதி ஞாபகம் இல்லை. 2019ம் வருடம் 9ம் மாதம் ஒரு நாள் என்னுடைய அம்மா என்னுடைய வீட்டிற்கு வந்துவிட்டு சுமார் 8லிருந்து 8.30 மணியளவில் அவருடைய வீட்டிற்கு திரும்பி சென்றவர் 10, 15 நிமிடங்களுக்குள் அழுது கொண்டே என்னுடைய வீட்டிற்கு வந்தார். என்னவென்று கேட்டதற்கு அவர் வீட்டிற்கு கொண்டிருந்தபோது மாரியாத்தாள் கோவில் அருகே இருசக்கர வாகனத்தில் வந்த

இருவரில் ஒருவர் இறங்கி வந்து என் அம்மாவுடைய 6 பவுன் தங்க செயினை அறுத்துவிட்டு நிற்காமல் சென்றுவிட்டதாக கூறினார். அதனால் நான் அருகிலிருந்தவர்களை அழைத்து கொண்டு செயின் பறித்தவர்களை தேடி பார்ர்தேன். அவர்கள் கிடைக்கவில்லை.

3. அதனால் மறுநாள் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். செயின் கிடைத்து விட்டதாக கூறினார்கள். நீதிமன்றத்தின் மூலம் மனு செய்து செயினை பெற்றுக்கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்பவம் குறித்து எனக்க நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு அம்மாவுடன் நான் சென்றேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு சென்ற போது ரவிச்சந்திரன், ஜெகநாதன், சதீஸ்குமார், மேலும் இருவர் எங்களுடன் காவல் நிலையம் வந்தார்கள். நாகராஜ் என்பவரை யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் 27 ம் தேதியன்று தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, 26 ம் தேதி புகார் அளித்தேன்.

2. புகார்தாரர் என்னுடைய அம்மா என்பதாலும், வழக்கு விபரம் எதுவும் தெரியாமல் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2024.06.19 19:09:34 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**